**வணக்கம்**

**ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**நாள்: 19.05.2022நேரம்: மாலை6மணி**

---

தலைப்புச்செய்திகள்

கொந்தளிப்பான உலகச் சூழலில், இந்தியாதான் உலகின் மிகப் பெரிய நம்பிக்கையாகத் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறி உள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் இன்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பருத்தி மற்றும் நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரினார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் இன்று, காரைக்கால் என்ஐடி பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கடந்த 24 மணி நேரத்தில், புதிதாக ஐவருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது.

--------------------------------

மோடி – இளைஞர் 1 (16)

உலக அளவில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலைக்கு இடையில், இந்தியாதான் உலகின் மிகப் பெரிய நம்பிக்கையாகத் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறி உள்ளார். குஜராத் மாநிலம் வதோத்ராவில் உள்ள 2 சுவாமி நாராயண் கோவில்களில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இளைஞர் முகாமில் காணொலிக் காட்சி மூலம் அவர் பேசுகையில், உலக அளவிலான பிணக்குகளுக்கு மத்தியில் உலக நாடுகள் இந்தியாவையே நம்பிக்கையுடன் எதிர் நோக்கி இருப்பதால், புதிய இந்தியாவை கட்டி அமைக்க, அனைவரும் கூட்டாக உறுதி ஏற்க வேண்டும் என்றார். தொன்மையான பாரம்பரியத்தை அடிப்படையாக கொண்டு, புதிய அடையாளம் மற்றும் புதிய சிந்தனைகளுடன் கூடியதாக புதிய இந்தியா அமையும் என்றும், இத்தகைய இந்தியாவே, மனித குலத்திற்கு வழிகாட்டும் என்றும் கூறினார்.

யோகா மற்றும ஆயர்வேதத்தின் ஆற்றலை தற்போது இந்தியா உலகிற்கு எடுத்துக் காட்டி வருவதாக பிரதமர் தெரிவித்தார். மென்பொருள் முதல் விண்வெளி ஆராய்ச்சி வரை எல்லாத் துறைகளிலும், புதிய எதிர்காலத்தை நோக்கி முன்னேறும்

நாடாக இந்தியா உருவாகி வருவதாக அவர் கூறினார். கொரோனா பெருந் தொற்று காலத்தில், உலக

*மோடி – இளைஞர் 2 (14)*

நாடுகளுக்கு தடுப்பூசி வழங்கிய நாடு இந்தியா என்றும், உலக அளவிலான வினியோக சங்கிலி பாதிக்கப்பட்ட நிலையிலும், இந்தியாவில்தான் சுயசார்பு நம்பிக்கை வலுப்பெற்று இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இளைஞர் முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ள சுவாமி நாராயண் கோவில் நிர்வாகத்தினரை பிரதமர் பாராட்டினார். இம்முகாமினால், இளைஞர்களிடையே, இந்தியாவின் கலாச்சாரம் பற்றிய விழிப்புணர்வு மேம்படும் என்றும், விடுதலையின் 75 ஆண்டுகளை கொண்டாடுவதற்கான அமிர்த பெருவிழாக் காலத்தில், இம்முகாம் நடைபெறுவது இன்னும் பொருத்தமானது என்றும் கூறினார்.

தூய்மை இந்தியா, சுயசார்பு இந்தியா, ஒரே பாரதம் – உன்னத பாரதம் போன்ற இயக்கங்கள் மூலம் இளைஞர்களை சமூக சேவைக்கு ஈர்க்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்முகாமின் தொடக்க விழாவில், குஜராத் மாநில அமைச்சர் திருமதி மனீஷா பென் வக்கீல், மாநில பிஜேபி தலைவர் திரு. சி.ஆர் பாட்டீல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------------

*மோடிகம்போடியா (14)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, கம்போடியா பிரதமர் திரு. சாம்டேக் டெக்கோ ஹூன் சென்-உடன், மெய்நிகர் முறையில் பேச்சு வார்த்தை நடத்தினார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, மக்கள் நிலையிலான தொடர்புகள் உட்பட, இருதரப்பு உறவுகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். இருதரப்பு ஒத்துழைப்பில், முன்னேற்ற வேகம் அதிகரித்து வருவது குறித்தும் இவர்கள் திருப்தி வெளியிட்டனர். இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையில், கம்போடியாவிற்கு முக்கிய இடம் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். கம்போடியாவில், அங்கோர்வாட் உள்ளிட்ட கோவில்களை புனரமைக்கும் பணிகளில் ஈடுபடுவதில் இந்தியாவிற்கு மகிழ்ச்சி என்றும் அவர் குறிப்பிட்டார். குவாட் வேக்ஸின் திட்டத்தின் கீழ், 3 லட்சத்து 25ஆயிரம் டோஸ் கோவிஷீல்ட் தடுப்பூசிகளை கம்போடியாவிற்கு வழங்கியதற்காக கம்போடிய பிரதமர் இந்தியாவிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

---

*அமித்ஷா (15)*

பல்கலைக்கழகங்கள், கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்கான மேடையாக திகழ வேண்டுமே தவிர, கொள்கை போர்களுக்கான களமாக அல்ல என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறி உள்ளார். சுய ராஜ்ஜியம் முதல் புதிய இந்தியா வரை, இந்திய கருத்தாக்கங்களின் மறு பார்வை என்ற தலைப்பில், டெல்லி

பல்கலைக்கழகத்தின் சார்பில், இன்று நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மத்திய அரசு அறிவித்துள்ள தேசிய கல்விக் கொள்கை, நாட்டின் வரலாற்றிலேயே எவராலும் எதிர்க்கப்படாத, அனைவராலும் ஏற்கப் பட்டுள்ள முதலாவது கல்விக் கொள்கை என்று உள்துறை அமைச்சர் கூறினார். 2014ஆம் ஆண்டு முதல் நாடு இதுவரை, பல்வேறு சாதனைகளை எட்டி இருப்பதாகவும், ஸ்டார்ட் – அப் நிறுவனங்கள் அதிகம் உள்ள உலகின் 3ஆவது நாடாக இந்தியா மேம்பட்டு இருப்பதும் வெளியுறவுக் கொள்கைக்கு அப்பாற்பட்ட தனியான பாதுகாப்பு கொள்கை ஒன்றை நாடு பின்பற்றி வருவதுமே இதற்கு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

-------------------------------

*ராஜ்நாத்யோகா* (10)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில், சர்வதேச யோகா தினவிழாவிற்கான முன்னோட்ட நிகழ்ச்சியில், கலந்து கொண்டார். நவீன வாழ்க்கை முறையில் மன இறுக்கத்தில் இருந்து விடுபடுவதில் யோகா முக்கிய பங்களிப்பதாக அவர் கூறினார். கொரோனா பெருந் தொற்று காலத்தில் மக்களின் நோய் எதிர்ப்பு தன்மையை அதிகரிக்க யோகா பெருமளவில் உதவியதாகவும் அவர் தெரிவித்தார். பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. அஜய் பட் மற்றும் ராணுவ வீரர்கள் பலர், இந்த யோகா நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சர்வதேச யோகா தினம் ஆண்டுதோறும் ஜுன் 21ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப் படுவதும், குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*ஸ்டாலின்-பருத்தி* (11)

தமிழக முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் இன்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பருத்தி மற்றும் நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை கோரினார். விலை உயர்வினால், ஜவுளித் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை முதலமைச்சர், மத்திய அமைச்சரிடம் எடுத்துக் கூறியதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தை சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.களின் குழு ஒன்று, நேற்று புதுடெல்லியில் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயலை சந்தித்து, பருத்தி மற்றும் நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரியதாகவும், இது குறித்து முதலமைச்சரின் கடிதம் ஒன்றை மத்திய அமைச்சரிடம் இவர்கள் ஒப்படைத்ததாகவும் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

வினாடி-வினா (2)

இனி, ஆசாதி கா அம்ருத் வினாடி-வினாப் போட்டியில், இந்த வாரத்திற்கான கேள்வியுடன், எமது செய்தியாளர் சந்திர மோகன்

-------------------------------

தமிழிசை (12)

காரைக்கால் என்ஐடி-தேசிய தொழில்நுட்ப கழகத்தில் இன்று நடைபெற்ற 8ஆவது பட்டமளிப்பு விழாவில், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, படிப்பு முடித்த மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். பட்டம் பெற தகுதி பெற்ற 276 பேரில், நேரடியாக பட்டம் பெற விண்ணப்பித்து இருந்த 136 பேருக்கு விழாவின் போது பட்டங்கள் வழங்கப்பட்டன. திருச்சி என்.ஐ.டி இயக்குநர் டாக்டர் அகிலா, காரைக்கால் என்ஐடி இயக்குநர் டாக்டர் சங்கர நாராயணசாமி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். காரைக்கால் என்ஐடி-தேசிய தொழில்நுட்ப கழகத்தில், கடந்த ஆண்டு 204 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளதாகவும், இவர்களின் சராசரி ஆண்டு வருவாய் 8.6 லட்சம் ரூபாய் என்றும் என்ஐடி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------------------------

புதுச்சேரிகொரோனா (14)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், இன்று காலை 10 மணி வரையிலான 24 மணி நேரத்தில், ஆயிரத்து 237 பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டதில் புதிதாக ஐவருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது. அதே நேரத்தில் ஏனாமில் ஒருவர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து விடுவிக்கப் பட்டார். புதிதாக தொற்று கண்டறியப் பட்டவர்களில், ஒருவர் ஏனாம் மற்றும் நால்வர் புதுச்சேரி பிராந்தியத்தை சேர்ந்தவர்கள் என்றும், சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. தற்போது, யூனியன் பிரதேசத்தில், 20 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளனர். இவர்களில் 10 பேர் புதுச்சேரி, ஒருவர் காரைக்கால் மற்றும 9 பேர் ஏனாம் பிராந்தியத்தை சேர்ந்தவர்கள். மாஹேயில் கொரோனா நோயாளிகள் எவரும் இல்லாத நிலை நீடிக்கிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இதுவரை, பூஸ்டர் டோஸ் உட்பட, மொத்தம் 16 லட்சத்து 99 ஆயிரத்து 770 டோஸ் கொரோனா தடுப்பூசிகள், பயனாளிகளுக்கு போடப் பட்டுள்ளதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

-------------------------------

நாடுகொரோனா (11)

நாட்டில் இதுவரை பயனாளிகளுக்கு போடப்பட்ட கொரோனா தடுப்பூசிகள் மொத்த எண்ணிக்கை 191 கோடியே 79 லட்சத்தை தாண்டி அதிகரித்து உள்ளது. நேற்றைய தினம், சுமார் 13 லட்சத்து 71 ஆயிரம் டோஸ் தடுப்பூசிகள் பயனாளிகளுக்கு

போடப் பட்டுள்ளதாகவும் மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் புதிதாக 2 ஆயிரத்து 364 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில், 2 ஆயிரத்து 582 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து உள்ளனர். குணமடைவோர் விகிதம், 98.75 சதவிகிதமாக உள்ளது. நாட்டில் தற்போது, 15 ஆயிரத்து 419 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளதாகவும், இது, இதுவரையிலான மொத்த எண்ணிக்கையில் 0.04 சதவிகிதம் என்றும் மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------------------------

தாக்கூர் (17)

உலக அளவில் திரைப்படம் மற்றும் ஊடகங்களுக்கான உள்ளடக்கத்தை உருவாக்கும் கேந்திரமாக இந்தியா மேம்பட முடியும் என்று, மத்திய செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறி உள்ளார். கேன்ஸ் திரைப்பட விழாவில் இந்தியா பற்றிய கருத்தரங்கில் அவர் பேசுகையில், இந்திய திரைப்படங்களுக்கு உலக அளவில் ரசிகர்கள் இருப்பதாகவும், விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்து இன்று வரை இந்தியாவின் வளர்ச்சிப் பாதையை திரைப்படங்கள் தெளிவாக படம் பிடித்து காட்டி இருப்பதாகவும் கூறினார். இந்திய பொருளாதாரத்தில், ஊடகத் துறையினரின் பங்களிப்பு கனிசமானது என்றும், இந்தியாவின் மென் திறன்களை உலகிற்கு எடுத்துக் காட்டுவதே இத்துறையினர்தான் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவில், சினிமா படப்பிடிப்புகள் மற்றும் இணை தயாரிப்புகளை ஊக்குவிக்க, அரசு, கடந்த 8 ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மத்திய திரைப்பட தனிக்கை வாரியத்தின் தலைவர் திரு. பிரசூன் ஜோஷி, திரைப்பட நடிகர் மற்றும் இயக்குநர் ஆர். மாதவன், மத்திய செய்தி-ஒலிபரப்புத் துறை செயலர் திரு. அபூர்வ சந்திரா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-------------------------------

ஐபிஎல் (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று மாலை 7.30 மணிக்கு மும்பையில் நடைபெறும் போட்டியில், குஜராத் – பெங்களூரு அணிகள் மோத உள்ளன. கொல்கத்தா – லக்னோ அணிகளுக்கு இடையே, நவி மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற போட்டியில் லக்னோ அணி 2 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

-------------------------------

ஜல்சக்தி *(14)*

ஜல் சக்தி இயக்கத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, மழை நீர் சேகரிப்பு இயக்கம் பற்றிய 2 நாள் பயிலரங்கு புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. ஜல் சக்தி அமைச்சகத்தின் நீர்வளத் துறை செயலர் திரு. பங்கஜ் குமார், இந்நிகழ்ச்சியில் பேசுகையில், நாட்டின் பல பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வரும் நிலையில்,

நீரின் தேவை அதிகரித்து வருவதால், நீர் சேமிப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு முயற்சிகள் மிக அவசியம் என்றார். விடுதலையின் 75ஆம் ஆண்டை கொண்டாடுவதற்கான அமிர்தப் பெருவிழா காலத்தில, ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர் நிலைகளை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் நிலவளத் துறை செயலர் திரு. அஜய் திர்க்கி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பருவ மழை தொடங்கும் முன்பாக, நாடு முழுவதும் மழை நீர் சேகரிப்பு வசதிகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் மத்திய ஜல் சக்தி அமைச்சகம் இந்த இயக்கத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது.

-------------------------------

*இந்தியாஉணவு* (16)

உலக அளவில், உணவு பாதுகாப்பு இன்மையால் பாதிக்கப் பட்டுள்ள மக்களின் துயரங்களை போக்கக் கூட்டு முயற்சிகள் தேவை என்று, வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. வி. முரளிதரன் கூறி உள்ளார். உலக உணவு பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து நியூயார்க்கில் நடைபெற்ற அமைச்சர்கள் நிலையிலான உயர்நிலைக் கூட்டத்தில் அவர் பேசுகையில், உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் கொரோனா பெருந்தொற்று காரணமாக எண்ணெய் விலை அதிகரித்து, வினியோக சங்கிலியும் பாதிக்கப் பட்டுள்ளதால், வளரும் நாடுகளில் பெருந் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறினார். உணவு நெருக்கடி பற்றிய நடப்பு ஆண்டிற்கான உலக அறிக்கையின்படி, உலகெங்கிலும் 139 மில்லியன் மக்கள் உணவு பாதுகாப்பு இன்மையால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், இந்நிலையை மாற்றி, உணவு பாதுகாப்பில் சமத்துவம் மற்றும சமூக நீதியை நிலை நாட்ட, இந்தியா உரிய முறையில் பங்களிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஆப்கானிஸ்தான், மியான்மர் மற்றும் இலங்கைக்கு உணவு உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை இந்தியா வழங்கி இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

-------------------------------

*மீண்டும் தலைப்புச்செய்திகள்*

கொந்தளிப்பான உலகச் சூழலில், இந்தியாதான் உலகின் மிகப் பெரிய நம்பிக்கையாகத் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறி உள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் இன்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பருத்தி மற்றும் நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரினார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் இன்று, காரைக்கால் என்ஐடி பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கடந்த 24 மணி நேரத்தில், புதிதாக ஐவருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது.

--------------------------------